## DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI
## OS No. 24/2019

**2023**ம் வருடம் டிசம்பர் திங்கள் 6ம் நாள் பிரதிவாதி தரப்பில் 2வது சாட்சியத்தின் வாக்குமூலம் 1873ம் ஆண்டு 10வது விதியின் படி திரு.மனோஜ்குமார், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர; : செந்துூரான் கிராமம்:

தந்தை / கணவர் பெயர் : தொழில் :

வயது :

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வாதியின் பெயர் முத்து என்கிற முத்துசாமி என்றால் சரிதான். அவருடைய தகப்பனார் பெயர் இருளன் என்றால் தெரியாது. இருளன் தகப்பனார் சாமுவேல் என்றால் தெரியாது. இருளன் என்பவர் வாதியின் உடன் பிறந்தவர் என்றால் தெரியாது. 5ம் பிரதிவாதி அய்யாச்சாமி வாதியின் உடன் பிறந்த சகோதரர் என்றால் தெரியாது. அய்யாச்சாமி இறந்து விட்டதால் அவருடைய வாரிசுகள் 8, 9 பிரதிவாதிகள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

இருளனின் வாரிசுகள் 6, 7 பிரதிவாதிகள் என்றால் தெரியாது. செல்லத்துரை என்பவர் திருமணம் செய்யாமல் இறந்து விட்டால் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கிரையம் வாங்கியதற்கு முன்பாக வில்லங்கம் போட்டு பார்க்கவில்லை. பட்டா, கிரையப்பத்திரத்தை பார்த்து தான் வாங்கினேன்.

நான் கிரையம் வாங்கிய ஆவணத்தை பி.வா.சா.ஆ.9 ஆக தாக்கல் செய்துள்ளேன். எனக்கு எழுதிக் கொடுத்தவருக்கு கிரையப்பாத்தியம் உள்ளது. பி.வா.சா.ஆ.9ல் பூர்வீக சொத்து என்று எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

எனக்கு எழுதிக்கொடுத்தவருக்கு பாத்தியம் இல்லாத நிலையில் அவர்

எனக்கு கிரையம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. உண்மையில் அவருக்கு பாத்தியம் இருந்திருந்தால் கிரையம் வாங்கிய சொத்து என்று எழுதிக்கொடுத்திருப்பார் என்றால் சரியல்ல.

எனக்கு கிரையம் எழுதிக்கொடுத்தவருக்கு பட்டா இருப்பதாக எஸ்.எல்.ஆர் – ல் குறிப்பிடவில்லை என்றால் என்னிடம் பட்டா காட்டினார். செட்டில்மென்ட் காலத்தில் வாதியின் உடன் பிறந்த சகோதரர் இருளன் பெயரில் தாவா சொத்திற்கு பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் தெரியாது.

இருளனுக்கு குடும்பத்தின் கர்த்தா என்ற அடிப்படையில் தான் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்குச் சொத்து வாதி மற்றும் 5 முதல் 9 வாதிகளுக்கு பாத்தியப்பட்டு அவர்கள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் தான் அனுபவித்து வருகிறேன்.

வாதி வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் என்னை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனக்கு கிரையம் கொடுத்து ஆறுமுகத்தேவரை 4ம் பிரதிவாதியாக சேர்த்துள்ளார் என்றார் சரிதான். வழக்கு தாக்கல் செய்த பின்னர் 4ம் பிரதிவாதி இறந்து விட்டதால் அவருடைய வாரிசுகளை 11 முதல் 14 பிரதிவாதிகளாக சேர்த்துள்ளார் என்றால் சரிதான்.

4ம் பிரதிவாதி இந்த வழக்கில் சேர்க்கப்பட்ட பின்னர் அவர் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் எனக்கு கிரையம் கொடுத்த பி.வா.சா.ஆ.9 ஐ பற்றி வழக்கில் மறைத்துள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கானது 2014ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

என்னுடைய எதிர்வழக்குரையில் 4ம் பிரதிவாதி சொத்து வேண்டும் என்றே எனக்கு கிரையம் கொடுத்த விவரத்தை மறைத்துள்ளார் என்றும், நான் அவரிடம் கேட்டதற்கு வயது மூப்பின் காரணமாக மறைத்து விட்டதாக சொல்லியுள்ளார்.

என்னுடைய எதிர்வழக்குரையின் அடிப்படையில் 4ம் பரிதிவாதி எனக்கு பி.வா.சா.ஆ.9 ஐ எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும் மோசடியாக வேறு ஒரு நபரை வைத்து பி.வா.சா.ஆ.9 ஐ எழுதப்பட்டுள்ளது என்றாலும சரியல்ல.

வழக்கு சொத்து சர்வே எண்.271 ல் மொத்த விஸ்தீரணம் 9 ஏக்கர் 93

செண்ட் என்றால் சரிதான். மொத்த சொத்திற்கு வடக்கே மரியனேந்தல் கிராம எல்லை உள்ளது என்றால் சரியல்ல. தெற்கே புனவாசல் கண்மாய் நீர்ப்பிடி எல்லை என்றால் சரிதான்.

கிழக்கே தவமணி, ஜோதிமுத்து, வேதமாணிக்கம், சாமுவேல் புஞ்சை உள்ளது என்றால் சரியல்ல. மேற்கு பக்கத்தில் வேலு, ஜெயராஜ் ஆகியோர் இடங்கள் உள்ளது என்றால் வேலு இடம் இல்லை. என்னுடைய எதிர் வழக்குரையில் வழக்குச்சொத்தில் நான்குமால் தவறாக உள்ளது என்பதை மறுக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

வழக்கு சொத்தில் சர்வே எண்.271ல் 9 ஏக்கர் 93 செண்ட் என்பது மொத்தமாக உள்ளது என்றால் கிரையம் வாங்கியதற்கு முன்பாக அவ்வாறு தான் இருந்தது. நான் வாங்கிய பின்னர் என்னுடைய சொத்தை தனியாக காட்டுவதற்கு வரப்பு போடவில்லை என்றால் சரியல்ல. வரப்பு போட்டுள்ளேன்.

அவ்வாறு வரப்பு உள்ளது என்பதை காட்டுவதற்கு நீதிமன்ற ஆணையர் மூலமாக நடவடிக்கை எடுக்க தயாராக உள்ளோம். நான் அவ்வாறு நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் வரப்பு போட்டுள்ளதாக நான் சொல்லியுள்ள எதிர்வாதம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக வாதி 1 பிரதிவாதியின் கணவர் மற்றும் 4ம் பிரதிவாதி மீது பரமக்குடி வருவாய் கோட்டாட்சியரிடம் பட்டா மாறுதல் கோரி மனு தாக்கல் செய்துளளார் என்றால் சரிதான்.

அந்த மனு தள்ளுபடி ஆனதால் இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியரிடம் மேல் முறையீடு தாக்கல் செய்து சிவில் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளும்படி உத்தரவு போடப்பட்டது என்றால் சரிதான். அதன் பின்னர் தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

வழக்கு சொத்தில் வாதி 5 முதல் 9 பிரதிவாதிகளை தவிர எனக்கோ மற்ற பிரதிவாதிகளுக்கோ எந்த பாத்தியம் இல்லை என்றால் சரியல்ல. ஆப்பனூரில் நாடார் சமூகத்தை சேர்ந்தவர்கள் யாரும் இல்லை என்றால் சரிதான்.

அவ்வாறு நாடார் சமூகத்தை சேர்ந்தவர்களுக்கு சொத்து இருந்ததாகவும்

அவர் எனக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளதாகவும், நான் தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 29.05.1947, 23.07.1947 ஆகிய தேதிகளிட்ட ஆவணங்களுக்கும் தாவா சொத்திற்கும் எந்த வித சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

உண்மையிலேயே 4ம் பிரதிவாதிக்கு மேற்படி ஆவணங்களின் மூலம் பாத்தியப்பட்டு இருந்தால் என்னுடைய கிரையப்பத்திரத்தில் அதை குறிப்பிட்டு சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு 1ம் பிரதிவாதி கணவர் பெயரில் தவறாக பட்டா ஏற்பட்டது என்றால் சரிதான்.

அவ்வாறு தவறாக 4ம் பிரதிவாதி மற்றும் என் பெயரிலும் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.8 முதல் பி.வா.சா.ஆ.14 வரை ஆவணங்கள் தவறாக ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தவறான பட்டாவின் அடிப்படையில் 4ம் பிரதிவாதி பி.வா.சா.ஆ.9 ஐ எழுதிக்கொடுத்திருப்பதாக நான் வழக்காடுகிறேன் என்றால் சரியல்ல.

தவறான பி.வா.சா.ஆ.9 ஐ வைத்து நான் பி.வா.சா.ஆ.15 ஐ தவறாக உருவாக்கியுள்ளேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.15 ஆவணம் வழக்கிற்கு பின்பாக ஏற்பட்டதால் அதற்கு சாட்சியம் மதிப்பு இல்லை என்றால் சரியல்ல.

வழக்கு சொத்திற்கு மேற்கே வாதி ஒரு போதும் ஒத்தி பெறவில்லை என்றும் அவ்வாறு ஒத்தி பெற்று அனுபவித்து வருவதாக இந்த வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலம் உண்மை என்றால் சரியல்ல.